# இன்றைய இறைவார்த்தை

# 26-02-2015

## தவக்காலம் முதல் வாரம் – வியாழன்

**முதல் வாசகம்:**

ஆண்டவரே, உம்மைத் தவிர வேறு துணையற்ற எனக்கு உதவி செய்யும்.

**எஸ்தர் நூலிலிருந்து வாசகம். எஸ் (கி) 4 : 17 k – m, r – t**

சாவுக்குரிய துன்பத்தில் துடித்த எஸ்தர் அரசி ஆண்டவரிடம் அடைக்கலம் புகுந்தார். இந்நிலையில் இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரை அவர் பின்வருமாறு மன்றாடினார். “என் ஆண்டவரே, நீர் மட்டுமே எங்கள் மன்னர். ஆதரவற்றவளும் உம்மைத் தவிர வேறு துணையற்றவளுமாகிய எனக்கு உதவி செய்யும். ஏனெனில், நான் என் உயிரைப் பணயம் வைத்துள்ளேன். ஆண்டவரே, நீர் எல்லா இனங்களிலிருந்தும் இஸ்ரயேலைத் தெரிந்தெடுத்தீர் என்றும், அவர்களின் மூதாதையர் அனைவரிடையிலிருந்தும் எங்கள் முன்னோரை என்றென்றைக்கும் உம் உரிமைச் சொத்தாகத் தெரிந்தெடுத்தீர் என்றும், நீர் அவர்களுக்கு வாக்களித்ததை எல்லாம் நிறைவேற்றினீர் என்றும், நான் பிறந்த நாள்தொட்டு என் குலத்தாரும் குடும்பத்தாரும் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

ஆண்டவரே, எங்களை நினைவுகூரும். எங்கள் துன்ப வேளையில் உம்மையே எங்களுக்கு வெளிப்படுத்தும். தெய்வங்களுக்கெல்லாம் மன்னரே, அரசுகள் அனைத்துக்கும் ஆண்டவரே, எனக்குத் துணிவைத் தாரும். சிங்கத்துக்கு முன் நாவன்மையுடன் பேசும் வரத்தை எனக்கு வழங்கும். எங்களுக்கு எதிராகப் போரிடுபவனை மன்னர் வெறுக்கச் செய்யும். இதனால் அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் அழியச் செய்யும். ஆண்டவரே, உமது கைவன்மையால் எங்களைக் காப்பாற்றும். ஆதரவற்றவளும் உம்மைத் தவிர வேறு துணையற்றவளுமாகிய எனக்கு உதவி செய்யும்.

இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவா! உமக்கு நன்றி.

**பதிலுரைப்பாடல்:**

**திருப்பாடல்கள்: 138 : 1 – 2a, 2bc – 3, 7c – 8 (பல்லவி: 3a)**

**பல்லவி: ஆண்டவரே, நான் மன்றாடிய நாளில் எனக்குச் செவிசாய்த்தீர்.**

1. ஆண்டவரே! என் முழுமனத்துடன் உமக்கு நன்றி செலுத்துவேன். தெய்வங்கள் முன்னிலையில் உம்மைப் புகழ்வேன். உம் திருக்கோவிலை நோக்கித் திரும்பி உம்மைத் தாள் பணிவேன். பல்லவி
2. உம் பேரன்பையும் உண்மையையும் முன்னிட்டு உமது பெயருக்கு நன்றி செலுத்துவேன். ஏனெனில், அனைத்திற்கும் மேலாக உம் பெயரையும் உம் வாக்கையும் மேன்மையுறச் செய்துள்ளீர். நான் மன்றாடிய நாளில் எனக்குச் செவிசாய்த்தீர் என் மனத்திற்கு வலிமை அளித்தீர். பல்லவி
3. உமது வலக் கையால் என்னைக் காப்பாற்றுகின்றீர். நீர் வாக்களித்த அனைத்தையும் எனக்கெனச் செய்து முடிப்பீர். ஆண்டவரே! என்றும் உள்ளது உமது பேரன்பு. உம் கைவினைப் பொருளைக் கைவிடாதேயும். பல்லவி

**நற்செய்திக்கு முன் வசனம்:** திபா **51 : 10a, 12a**

கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்.
உம் மீட்பின் மகிழ்ச்சியை மீண்டும் எனக்கு அளித்தருளும்.

**நற்செய்தி வாசகம்:**

கேட்போர் எல்லாரும் பெற்றுக்கொள்கின்றனர்.

**தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 7 : 7 – 12**

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில், கேட்போர் எல்லாரும் பெற்றுக் கொள்கின்றனர். தேடுவோர் கண்டடைகின்றனர் தட்டுவோருக்குத் திறக்கப்படும். உங்களுள் எவராவது ஒருவர் அப்பத்தைக் கேட்கும் தம் பிள்ளைக்குக் கல்லைக் கொடுப்பாரா? அல்லது, பிள்ளை மீன் கேட்டால் பாம்பைக் கொடுப்பாரா? தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பார் அல்லவா! ஆகையால் பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை

எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே.

இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே உமக்குப் புகழ்.

**சிந்தனை:**

இறைவனிடம் கேளுங்கள். அவன் இல்லை என்று சொல்லுவதில்லை. உங்களை கையேந்தச் சொல்லவில்லையே. தாயும் பிள்ளையும் என்ற உறவில் கேட்கச் சொல்கிறார். நம் இயேசு நமக்கு அந்நியனல்ல. அவர் நம் தந்தை. எங்கள் தந்தையே என்று தானே உங்களை அழைக்கச் சொன்னார். ஆகவே செபிக்கும்போது உரிமையோடு கேளுங்கள். உறவோடு கேளுங்கள். பிச்சைக்காரனாகக் கெஞ்ச வேண்டாம்.

கொடுப்பதில் அவர் தந்தை. நம்மீது அக்கறை உள்ளவர். சரியானதை சரியான வேளையில் போதுமான அளவும், அதற்கு மேலாகவும் கொடுப்பார். வேறுபாடு காட்டமாட்டார். விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பார் அல்லவா! கொஞ்சம் சிந்தித்து பாருங்கள். ஆண்டவர் முன் அமர்ந்து செபியுங்கள். நீங்கள் கேட்டது என்ன? கிடைத்தது என்ன? கிடைக்காமல் போனது என்ன? நீங்கள் கேட்காமல் கிடைத்தது என்ன? கிடைத்தது எல்லாம் உங்கள் முயற்சியால் கிடைத்தது என்று நினைத்தால் கிடைக்காமல் போவதற்குக் காரணமும் நீங்களாகத்தான் இருக்கும். எனவே நிறையக் கிடைக்க வேண்டும், பெரிதாகக் கிடைக்க வேண்டும் என்றால் இறைவனிடம் கேட்கத் தயங்காதீர்கள். கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள் என்று சொன்னதும் அவர் தானே?

**********